1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ), (இ) & (உ) சாஸ்தா நகர், அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், பட்டினப் பாக்கம் ஆகிய வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளில் நூலகங்கள் ஏற் படுத்துவதற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான விலையை உள்ளூர் நூலக அதிகாரிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Centrally Sponsored Rural Housing Projects

@ * 321 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the State Goverment have requested to increase the allotment of financial aid for the centrally sponsored rural housing projects in this State during 1972; and

(b) if so, the details thereof?

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ல் இம்மாநிலத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி உதவியை அதிகப்படுத்து மாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை. இம்மாநிலத்தில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் கிராமப்புற வீட்டு வசதித்திட்டம் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Complaint about a Private Management High School at Pichanur.

* S.N. 1. Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any complaint about a Private Management High School at Pichanur, Coimbatore district, has been brought to the notice of the Government;

(b) if so, the details thereof; and

(c) the action taken by the Government thereon?

@ Postponed from the list of questions for 23rd August 1972.